சுற்றறிக்கை இலக்கம்: **10/2005**

எனது இலக்கம்: எம்.13/01/2005

பதிவாளர் நாயகம் திணைக்களம்,

இல: 280, பிரதான வீதி,

கொழும்பு 11.

25 ஆகஸ்ட் 2005.

அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்களுக்கு,

**காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்தல்**

காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட, 2005 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் தற்போது நடைமுறையிலுள்ளது. அச் சட்டத்தின் பிரதியொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். இச்சட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

I. பயங்கரவாத அல்லது அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்லது சிவில் கலவரங்கள் காரணமாகக் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்தல் (சட்டத்தின் பகுதி I).

II. இயற்கை அனர்த்தங்கள் அல்லது இடர்கள் காரணமாகக் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்தல் (சட்டத்தின் பகுதி II).

02. இதற்கமைய, அச் சட்டத்தின் 2 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை இப்போது நீங்கள் பொறுப்பேற்க முடியும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். அதன்படி, இது தொடர்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படவும்:

**பயங்கரவாத அல்லது அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்லது சிவில் கலவரங்கள் காரணமாகக் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்தல்:**

I. **விண்ணப்பதாரர்:**

இச்சட்டத்தின் கீழ் மரணப் பதிவுக்காக, மரணமடைந்ததாகக் கருதப்படும் நபரின் நெருங்கிய உறவினர் ஒருவரே விண்ணப்பிக்க வேண்டும்.

II. **விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பங்கள் மேற்கூறிய சட்டத்தின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமையவே சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பமானது, மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் கடைசியாக வசித்த பிரதேசச் செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பத்துடன், அந்த நபர்

மரணமடைந்திருப்பார் என நம்புவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு முறையாகத் தயாரிக்கப்பட்ட சத்தியக்கடதாசி, அந்த நபர் ஒரு வருடத்திற்கு மேலாக உயிருடன் இருப்பதை தாம் காணவில்லை அல்லது கேள்விப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தி அவர் கடைசியாக வசித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை மற்றும் இக்கோரிக்கையை உறுதிப்படுத்துவதற்கான ஏனைய எழுத்துமூல ஆதாரங்கள் இருப்பின் அவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

393 ஆம் அதிகாரமான விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு ஒன்றினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் ஏதேனும் ஒரு நபர் காணாமல் போயுள்ளதாகக் கண்டறியப்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த விசாரணை ஆணைக்குழுவின் அல்லது விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்க முடியும்.

## III. விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்:

(அ) மேற்கூறியவாறு பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளருக்கு விண்ணப்பம் கிடைத்தவுடன், அக்கோரிக்கையின் பிரதியொன்று அவரது அலுவலக அறிவித்தல் பலகையிலும், மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் கடைசியாக வசித்த அல்லது நிரந்தரமாக வசித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் இரண்டு வார காலத்திற்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும். இந்த அறிவித்தல் முதன்முறையாகக் காட்சிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள், குறித்த நபரின் மரணப் பதிவு தொடர்பாக எவரேனும் எதிர்ப்புத் தெரிவிக்க விரும்புவார்களாயின், அதற்கான காரணங்களை விளக்கி முறையாகத் தயாரிக்கப்பட்ட சத்தியக்கடதாசி மூலம் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளருக்குக் கிடைத்த மேற்கூறிய எதிர்ப்புகள் தொடர்பாகப் பரிசீலித்த பின்னரும், அல்லது பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரால் விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவர் உதவிப் பதிவாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கும் அறிக்கையைப் பெற்ற பின்னரும், உதவிப் பதிவாளர் நாயகம் அந்த மரணத்தைப் பதிவு செய்வது பொருத்தமானது எனத் தீர்மானித்தால், அந்த நபர் கடைசியாக வசித்த இடத்திற்குரிய பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுப் பிரிவின் பதிவாளருக்கு அம் மரணத்தைப் பதிவு செய்யுமாறு கட்டளையிட வேண்டும். குறித்த பதிவாளர் அந்த மரணத்தை முறையாகப் பதிவு செய்த பின்னர்,

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கு ஒரு மரணச் சான்றிதழை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**03. இயற்கை அனர்த்தங்கள் அல்லது இடர்கள் காரணமாகக் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்தல்:**

முழு இலங்கைக்கும் அல்லது இலங்கையின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு உயிர் அல்லது உடமை சேதங்களை ஏற்படுத்திய, தேசிய மட்டத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம் அல்லது இடர் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில், அப் பாதிப்புக்குள்ளான ஏதேனும் ஒரு நிர்வாக மாவட்டம், பிரதேசச் செயலகப் பிரிவு அல்லது கிராம உத்தியோகத்தர் பிரிவு "பாதிக்கப்பட்ட பிரதேசம்" எனப் பதிவாளர் நாயகத்தினால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். சுனாமிப் பேரழிவிற்கு உள்ளான பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் பட்டியல் இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**(i) <u>விண்ணப்பதாரர்:</u>**

மேற்கூறிய தேசிய அனர்த்தத்தின் போது காணாமல் போன ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவரால் அல்லது குடும்பத்தின் அத்தகைய உறவினர்கள் எவரும் அனர்த்தத்தில் உயிர் பிழைக்காத சந்தர்ப்பத்தில், காணாமல் போன நபர் தொடர்பாக அக்கறையுள்ள ஒருவரால் அல்லது அவர் காணாமல் போயுள்ளார் என உறுதியாக நம்பும் ஒருவரால் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

**(ii) விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பத்துடன், மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் காணாமல் போனதற்கான காரணங்களைக் காட்டும் சத்தியக்கடதாசியொன்றை, மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் வழக்கமாக வசித்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**(iii) விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்:**

விண்ணப்பம் கிராம உத்தியோகத்தருக்குக் கிடைத்ததும், அதில் கூறப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மையை தனது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதிப்படுத்திப் பரிந்துரைக்கும் அறிக்கையுடன், அந்த கிராம உத்தியோகத்தர் பிரிவு அமைந்துள்ள பிரதேசச் செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் / மாவட்டப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். பிரதேச செயலாளர் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் மேலொப்பமிட்டு (Endorse) சம்பந்தப்பட்ட உதவிப் பதிவாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். உதவிப் பதிவாளர் நாயகம் ஆவணங்கள் குறித்துத் திருப்தியடைந்த பின்னர், அம் மரணத்தைப் பதிவு செய்வதற்கு உத்தரவு பிறப்பித்து, விண்ணப்பதாரருக்கு இலவச மரணச் சான்றிதழ் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

**04. வெளிநாட்டவர்களின் மரணத்தை பதிவு செய்தல்:**

வெளிநாட்டவர் ஒருவர் இலங்கைக்கு வந்திருந்த போது மேற்கூறிய இயற்கை அனர்த்தம் காரணமாகக் காணாமல் போயுள்ளார் என்பதற்குச் சான்றுகள் இருக்கும் சந்தர்ப்பத்தில், அவருக்கு மரணச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக அது பற்றி அறிந்த ஒருவர் கோரிக்கையை விடுக்கலாம். அத்தகைய விண்ணப்பத்தை, காணாமல் போனவர் எந்த நாட்டின் பிரஜையோ அந்த நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அல்லது கான்சலர் (Consul) உறுதிப்படுத்தி, நேரடியாகப் பதிவாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர் மரணத்தைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்.

**<u>பிரதேச செயலாளர்கள் / மாவட்டப் பதிவாளர்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வலய அலுவலகங்களின் முகவரிகள் கீழே தரப்பட்டுள்ளன:</u>**

01. உதவிப் பதிவாளர் நாயகம்,
தெற்கு வலய அலுவலகம்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கோட்டை
காலி.

02. உதவிப் பதிவாளர் நாயகம்,
மேல் மாகாண வலய அலுவலகம்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்
மாகஸ் பெர்ணாணடோ மாவத்தை
கொழும்பு 07

03. உதவிப் பதிவாளர் நாயகம்,
வட மத்திய வலய அலுவலகம்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்
வத்கிமி வீதி
குருணாகலை

04. உதவிப் பதிவாளர் நாயகம்,
ஊவா மற்றும் சப்ரகமுவ வலய அலுவலகம்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்
புதிய நகரம்
இரத்தினபுரி

.

05. உதவிப் பதிவாளர் நாயகம்,
வட கிழக்கு வலய அலுவலகம்
பதிவாளர் நாயகம் திணைக்களம்
மட்டக்களப்பு / யாழ்ப்பாணம்

06. உதவிப் பதிவாளர் நாயகம்,
மத்திய மாகாண வலய அலுவலகம்
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
கண்டி.